**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**12 ஜூன் 2015 / 25 ஷஃபான் 1436**

# ரமதான் மாதத்தின் நேரங்களைக் குடும்பத்தாருடன் கழிப்பது

اَلْحَمْدُ للَّه الَّذي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ، لِيُظْهِرَهُ عَلَى الدِّيْنِ كُلِّه وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِ الْمُرْسَلِيْنَ، حَبِيْبِنَا الْكَرِيْمِ، وَرَسُوْلِنَا الْعَظِيْمِ، سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آله وَصَحْبِه أَجْمَعِيْنَ.

أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" (பக்தியை) உறுதி செய்து கொள்ள கடின முயற்சி செய்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக! நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். காரணம், ஒவ்வொரு

"முஃமின்" (இறை நம்பிக்கையாளரும்) மிக்க ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புனிதமிக்க ரமதான் மாதத்தில், இன்னும் ஒரு சில தினங்களில், அல்லாஹ்வின் அனுமதியுடன் நாம் காலடி எடுத்து வைக்க உள்ளோம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கடந்த வாரத்தில், ரமதான் மாதத்துக்காக நம்மை நாம் தயார் செய்து கொள்வதற்கு, ஷஃபான் மாதத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தைப் பற்றி நாம் நினைவூட்டப்பட்டோம். இவ்வாரப் பிரசங்கத்தில், ரமதான் மாதத்துக்காக நமது குடும்பத்தார்களைத் தயார் செய்வதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க உள்ளோம்.

ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், நமது குடும்பத்தார்களுக்குத் தொடர்ந்து நாம் வழிகாட்டுவதன் அவசியத்தைப் பற்றி அடிக்கடி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இறைத்தூதர்(ஸல்) நவின்றதாக இமாம் புகாரி (ரஹ்) தனது ஹதீதுக் கிரந்தத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:

"முஹம்மது (ஸல்) உடைய மகள் ஃபாத்திமாவே! இவ்வுலகில் நீ விரும்புகின்ற எந்த செல்வத்தையும் என்னிடம் கேட்கலாம்; ஆனால், மறுமையில் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் நிற்கும் போது சிறிதளவு கூட உனக்கு நான் உதவி செய்ய முடியாது என்பதை நினைவில் கொள்"

மேற்கண்டவாறு, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் தனது குடும்பத்தார்களுக்கு அடிக்கடி நினைவூட்டி, வழிகாட்டினார்கள். நாம் நமது குடும்பத்தார்களுடன் இம்மையில் மட்டுமல்ல, மறுமையில் நம்மைப் படைத்த இறைவனாகிய அல்லாஹ்வைச் சந்திக்கும் போதும் மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறோம். அப்போது நமது செயல்களைப் பற்றி நாம் கேள்வி கேட்கப்படுவோம். நமது குடும்பத்தார் அனைவரும் சொர்க்கவாசிகளாக ஆக வேண்டுமென அல்லாஹ்விடம் நாம் வேண்டிக் கொள்கிறோம். அல்லாஹ் திருக்குர்ஆனின் "அத்தூர்" எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَالَّذِينَ آمَنُوا وَاتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُم بِإِيمَانٍ أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ وَمَا أَلَتْنَاهُم
مِّنْ عَمَلِهِم مِّن شَيْءٍ ۚ كُلُّ امْرِئٍ بِمَا كَسَبَ رَهِينٌ ﴿٢١﴾

பொருள்: எந்த நம்பிக்கையாளர்களின் சந்ததிகள் தங்கள் பெற்றோர்களைப் பின்பற்றி நம்பிக்கை கொள்கின்றார்களோ (அந்தச் சந்ததிகளின் நன்மைகள் குறைவாக இருந்தாலும், அவர்களின் பெற்றோர்கள் திருப்தியடையும் பொருட்டு) அவர்களுடைய சந்ததிகளையும் அவர்களுடன் (சொர்க்கத்தில்) சேர்த்து விடுவோம். இதனால், அவர்களுடைய பெற்றோர்களின் நன்மைகளில் எதனையும் நாம் குறைத்து விட மாட்டோம். ஒவ்வொரு மனிதனும் தனது செயலுக்குப் பொறுப்பாளியாக இருக்கின்றான்.

ஜமாஅத்தார்களே!

குடும்ப அமைப்பு என்பது, ஒவ்வொரு சமூகம் மற்றும் நாட்டின் அடிப்படையாக உள்ளது. குடும்பம் வெற்றியடையும் போது முழு சமுதாயமும் வெற்றியடைகிறது. எனினும், குடும்பத்தார்கள் சரியான வழிகாட்டுதலின்றி விடப்பட்டால் அவற்றின் உறுப்பினர்கள் நஷ்டமடைய நேரிடும்.

எனவே தான், ரமதான் மாதத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு நம்மை நாம் தயார் செய்து வரும் இக்காலையில், குடும்ப அமைப்பைப் பாதுகாக்க வேண்டுமென்று ”கதீப்” (பிரசங்கம் செய்பவர்) நம்மனைவரையும் கேட்டுக் கொள்கிறார். குறிப்பாக, நமது பிள்ளைகள் பல சவால்களையும் சோதனைகளையும் எதிர்கொண்டு வரும் நிலையில் குடும்பத்தைப் பாதுகாப்பது மிகவும் அவசியம் என நினைவூட்டுகின்றார். நமது பிள்ளைகள் பலவிதமானப் போக்குகளையும் கலாச்சாரங்களையும் எதிர்கொண்டு வருகிறார்கள். அவற்றில் சில, நல்ல விஷயங்களாகவும் உள்ளன. உதாரணமாக, சில கலாச்சாரங்கள் கல்வி கற்குமாறும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளுமாறும் நமது பிள்ளைகளைத் தூண்டுகின்றன; அவற்றில் சில, சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்குப் புதுமையாகவும், நுட்பமாகவும் செயல்படுமாறு அவர்களை ஊக்குவிக்கின்றன. அதே சமயம், அவற்றில் எத்தனையோ கலாச்சாரங்களும் போக்குகளும் ஆண், பெண்களின் சுதந்திரமான கலப்பு மற்றும் ஓரினச் சேர்க்கை போன்ற கவலை தரும் செயல்களைத் தூண்டுவதாகவும் உள்ளன.

இது போன்ற விஷயங்கள் கொள்கைகள் மற்றும் அபிப்பிராயங்களிலும் காணப்படுகின்றன. தீவிரமான கொள்கைகள் அல்லது ஒரு அணுகுமுறை,

ஒரு கருத்து தான் சரியானது, மற்றவை தவறானவை, வழிதவறியவை எனும் கருத்தைப் பிரதிபலிக்கும் சன்மார்க்கம் சம்பந்தமான எல்லைக்குட்பட்ட அபிப்பிராயங்களை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பதின்ம வயது ஆண், பெண்கள் அவர்களது வயதுகளின் காரணமாக, மன ரீதியிலான பல மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். அவற்றின் அடையாளங்களும் வெளிப்பட்டு வருகின்றன. எனவே, நமது குடும்பத்தார்களும் பிள்ளைகளும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் இவ்விதமானச் சவால்களை எதிர்கொண்டு வெற்றிகொள்வதற்கு உதவி செய்வது நமது கடமையாக உள்ளது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!
வரும் ரமதான் மாதத்தில் நமது குடும்பத்தார்களுக்கு வழிகாட்ட நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ”ரஹ்மத்” எனப்படும் அருள்கள் மிக்க இம்மாதத்தில், அனைத்து நல்ல விஷயங்களுக்காக நமது அன்பைப் பொழியும் மாதமாக ஆக்கிக் கொள்வோமாக! இந்த ரமதான் மாதத்தில், நம்மிடமும் நமது குடும்பத்தார்களிடமும் சிறந்த மதிப்பீடுகளை கலாச்சாரமாக ஆக்கிக் கொள்வோம் எனத் தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். சன்மார்க்க வகுப்புகள் அல்லது உள்ளூர் உலமா பெருமக்களால் (சன்மார்க்க அறிஞர்கள்) நிகழ்த்தப்படும் பிரசங்கங்கள் போன்றவற்றில் குடும்பத்தாருடன் கலந்து பயனடைவதன் மூலம், வரும் ரமதானுக்காக நாம் தயாராகலாம். இதற்கு முன்பு ரமதானில் நாம் திருக்குர்ஆனை ஓதுவதில் மட்டும் கவனம் செலுத்தியிருக்கலாம். இந்த ரமதானில் திருக்குர்ஆனின் கருத்துக்களை அறிவதற்கு ஏன் நாம் முயற்சிக்கக் கூடாது? காரணம், இது போன்ற முயற்சிகள் சன்மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதில் நமது குடும்பத்தார்களிடம் சகிப்புத்

தன்மையை ஏற்படுத்தும். தொழில் நுட்ப விஞ்ஞானம் முன்னேற்றம் கண்டுள்ள இக்காலத்தில், இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்களால், திருக்குர்ஆனில் காணப்படும் பல வரலாறுகள் சம்பந்தமாக எழுதப்பட்ட எலக்ட்ரானிக் புத்தகங்களை இணையதளங்களிலிருந்து மிக எளிதில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடிகிறது. எனினும், இதன் பொருள், ஒரு ஆசிரியர் மூலமாக நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதல்ல. நாம் உள்ளூர் உஸ்தாதுமார்கள், பயிற்சி பெற்ற அறிஞர்களின் வழிகாட்டுதலின் பாலும் அவசியமாகின்றோம். காரணம், அப்போது தான் நாம் திருக்குர்ஆனின் வசனங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருப்பதை உறுதி செய்ய முடியும்.

மறுபுறம், ரமதான் மாதம் மிகவும் அருகாமையில் இருக்கும் நிலையில், அதிகமான நற்காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் ஒவ்வொருவருக்கும் இருக்கும். எனவே, இதனை அரிய வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நம்மிடமும் நமது பிள்ளைகளிடமும் நல்ல மதிப்பீடுகளை ஏற்படுத்தி, அவற்றைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் நமது பிள்ளைகளின் உள்ளங்கள் நற்காரியங்களை விரும்புபவையாக ஆகி விட வேண்டும். கிருபைமிக்க நற்காரியங்களை நாம் யாருக்கும் செய்யலாம். தொண்டூழியம் செய்ய வேண்டுமென்ற நமது எண்ணத்தைப் பலப்படுத்துவோமாக! நமது பிள்ளைகளால் புரியப்படும் நற்காரியங்களை மதம், இனம் என்ற பாகுபாடின்றி அனைவரும், மற்ற படைப்புகளும் அனுபவிக்கும் விதத்தில் நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்போமாக! பின்வரும் ஹதீதில் காணப்படும் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் போதனைகளை ஆர்வத்துடன் பின்பற்றுவோமாக! :

"எவர் மற்றவர்களுக்கு அதிக நன்மைகளைச் செய்கின்றாரோ அவர் தான் அல்லாஹ்வினால் அதிகம் நேசிக்கப்படுகிறார்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னு அபித் துன்யா)

அதே சமயம், நமது பிள்ளைகளை நன்றாகப் புரிந்து கொள்ள முயற்சிப்போமாக! அன்பு மற்றும் கருணைச் சிந்தனையால் அவர்களை அணுகுவோமாக! சிலவேளைகளில், நமது பிள்ளைகள் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மைச் சோதிக்கலாம். அவர்கள் எப்பிரச்சனைகளைப் பற்றி நம்மிடம் முறையிட்டாலும், முதன்முதலாக, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையை புரிந்து கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். அவர்கள் தமது சிந்தனைகளிலிருந்து ஒருபோதும் மாறமாட்டார்கள் என நாம் கருதி விடக் கூடாது; அவ்வாறு கருதுவது அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் மேற்கொண்டு இடைவெளியை ஏற்படுத்தி விடும். உதாரணமாக, பால் சம்பந்தமான அடையாளப் பிரச்சனைகளை எதிர்கொண்டு, குழப்பத்திலுள்ள நமது பிள்ளைகள் தமது இனத்தைச் சேர்ந்தவர்களால் கவரப்படலாம். அந்நிலையில், அவர்களின் பெற்றோர்களால் அப்பிள்ளைகளின் நம்பிக்கைக்குரிய நண்பர்களாக ஆக முடியவில்லையெனில், அப்பிள்ளைகள் மேற்கொண்டு குழம்பி விடுவார்கள். குறிப்பாக, வாழ்க்கை அமைப்புகளை மாற்றிக் கொள்ளத் தூண்டுகின்ற பல முயற்சிகளும், இயக்கங்களும் அதிக அளவில் "ஆன்லைன்" மற்றும் "ஆஃப் லைனில்" காணப்படும் இக்காலத்தில் அப்பிள்ளைகள் அதிகம் குழம்பி விடுவார்கள். இதுபோன்ற கலாச்சாரங்களில் நமது பிள்ளைகள் சிக்கிக் கொள்ளக் கூடாது என நாம் விரும்புகிறோம். எனினும், இவ்விஷயத்தில் நமது பங்கு என்ன? இது

போன்ற சவால்களை எதிர்கொள்ளும் நமது பிள்ளைகளிடம் உடன்பாடான விளைவுகளை ஏற்படுத்த எவ்விதமான ஆக்கப்பூர்வ முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்? என இங்கு சிந்திக்க வேண்டும்.

ஒருவேளை, அவ்விதமானப் பிள்ளைகள் தமது பிரச்சனைகளை நம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லையெனில், மற்ற வழிகளை நாட அவர்கள் முயற்சிப்பார்கள். அவர்களை ஆதரிப்பவர்களுடன் பேசுவதற்கு அவர்கள் விரும்புவார்கள். எனவே, அவர்கள் விஷயத்தில் நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அவர்கள் மீது அன்பு கொண்டு, அவர்களுக்கு உதவுவதை உளப்பூர்வமாக விரும்ப வேண்டும். அவர்களோடு நட்புடன் பழகுங்கள். நம்மால் அவர்களுக்கு ஆலோசனை கூற முடியவில்லையெனில், PPIS எனப்படும் ஆலோசனைகள் வழங்கப்படும் மையங்களை அணுகலாம்.

ஜமாஅத்தார்களே! நமது எண்ணங்களைப் பாதுகாத்துக் கொள்வோமாக! நமது குடும்பத்தார்களுக்கும் சமுதாயத்துக்கும் நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதில் உண்மையாக இருப்போமாக! நமது எண்ணத்திலும் நோக்கத்திலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான ”தக்வா” (பக்தியை) ஏற்படுத்திக் கொள்வோமாக! நன்மையை அடைவதற்கான சிறந்த பாதையைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் புறத்திலிருந்து அருளும், நேர்வழியும் நமக்குக் கிடைக்கட்டுமாக! அந்நிலையில், நமது குடும்பத்தார்களும் நமது பிள்ளைகளும் இம்மையிலும் மறுமையிலும் ஹராமான (தடுக்கப்பட்ட) விஷயங்களிலிருந்து அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் பாதுகாக்கப்படுவோம். ஆமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.